**தலைப்பு 104 – தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று என்பன தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம், அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148,149,150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 104 - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள், பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை

மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 127 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 127 பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| 127 (1)(அ) | சரியாகவும் நிதி சம்பந்தமான ஒழுங்கு நெறிப்படியும் நடைபெறுமாறு திணைக்கள நிதி சம்பந்தமான வேலைகளைத் திட்டமிடல். | 1. செயற்றிட்டம் சரியாக தயாரிக்கப்படாமை | 2.1.1 |
| | | 2. பெறுகைகளை திட்டமிடல் | 2.3 |
| | | 3. உள்ளக கணக்காய்வில் குறைப்பாடுகள் | 2.8 |
| | | 4. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தாமை | 2.5 |
| 127(2) | தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள திணைக்களங்களில் நடப்புச் செலவினங்களும் புதிய அல்லது அதிகரித்த செலவுகளுக்குரிய உத்தேசங்களும் அவற்றின் சிக்கனமும் திறமையும் சம்பந்தமாக குறித்த அமைச்சில் நுண்ணித்தாக ஆராயப்படுதல் | 1. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாமை | 2.1.2 |
| | | 2. உள்நாட்டு நன்கொடை கருத்திட்டங்களின் குறைப்பாடுகள் | 2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் யாவும், அவர் தனக்கே உரியதான நிருவாக அனுபவத்தையும் பகுத்தாய்வு அறிவினையும்கொண்டு அவற்றில் பிரயோகிப்பதற்கென அவருக்கு விடப்ப:தல் | 1. வாகன உபயோகத்தில் குறைப்பாடுகள் | 2.4 |
| | | 2. பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள் இருத்தல் | 2.4(ஆ) |
| | | 3. கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல் | 2.4(ஈ) |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் முறையே சமர்ப்பிக்கப்பட்டு அவற்றில் அவர் கையொப்பமிட முன்னர், அமைச்சில் பரிசோதிக்கப்படுகின்ற மதீப்பீடுகளிலும் உண்மையான செலவுகளிலும் ஏற்பட்டுள்ள முக்கியமான வேறுபாடுகளை நுட்பமாய் அவரால் ஆராயப்படுதல் | 1. பொது வைப்புக் கணக்கின் குறைப்பாடுகள் | 2.7 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்றிருக்கும் அரசிறை அல்லது பிற அரசாங்க வருமானங்களைச் சேகரித்தல் அமைச்சினால் மிக நுணுக்கமாக கவனிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.6 |
| 127(7) | உத்தியோகத்தர்களது.∵. பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு நிதி ஓழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.∵.பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், பொறுப்பு கூறுவதற்கு எற்பாடுகள் அளிக்கப்பட்டிருப்பின் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளிலிருந்து கணக்கீட்டு அலுவலர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அரசாங்க கணக்குக் குழுவுக்கு முன் தோன்றி தான் பொறுப்பாகவுள்ள திணைக்களக் கணக்குகளை தனது கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து விளக்கமளித்து, அவை முறையானவை எனவும் எடுத்துரைத்து அக்குழுவிற்கு உதவி செய்தலும் அவருடைய கடமையாகும். | அரசாங்க அலுவலர்களின் பிணை | 2.10 |

2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

2.1 செயலாற்றுகை

2.1.1 திட்டமிடல்

மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 21 பிரதான கடமைப் பொறுப்புகள் இருந்ததுடன், அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த 17 நியதிச் சட்ட நிறுவனங்களில், எதிர்பார்க்கப்படும் பலன்களை அடைந்து கொள்வதற்காக தாயரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ). செயற்றிட்டத்தில், அமைச்சின் எதிர்பார்க்கப்பட்ட 21 பிரதான அலுவல்களை காட்டப்பட்டிருப்பினும், அந்த அலுவல்களுக்கு ஒழுங்கமைந்த வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அமைச்சின் பிரதான அலுவல்களின் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்விற்கு கருத்துரைக்க முடியவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 30 ஆந் திகதியில் திருத்தம் செய்யப்பட்ட செயற்றிட்டம் 2018 ஆம் ஆண்டு சனவரி 09 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த திருத்தம் செய்யப்பட்ட செயற்றிட்டத்தின் பிரதான கடமைப்பொறுப்புகளை குறிப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டு யூன் 09 ஆந் திகதிய மற்றும் 2022/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை கவனத்தில் கொள்ளவில்லை.

2.1.2 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

எதிர்பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தை அடைந்துக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதி நகர கருத்திட்டம் பொருட்டு 2017 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் 200 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கருத்திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 71.34 மில்லியன் நிறுவனமொன்றிடம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்கள்படி மீளாய்விற்கான ஆண்டில் அதில் ரூபா 22.37 மில்லியன் மட்டும் செலவிடப்பட்டு ரூபா 48.94 மில்லியன் எஞ்சியிருந்தது. ஆயினும் 2018 ஆம் ஆண்டில் செலவினம் பொருட்டு அமைச்சுமூலம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 100 மில்லயின் ரூபா மேற்படி நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டில் தனியார் நிதி நிறுவனமொன்றில் வைப்புச் செய்தவர்களுக்கு பணம் செலுத்துவதற்காக குறைநிரப்பு ஒதுக்கீடுகள்மூலம் 3,555.10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அதில் 2,500 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டிருந்தது. மூன்றாவது கட்டத்தின்கீழ் 10 மில்லியன் ரூபாவிற்கு அதிகமாக வைப்புச் செய்த 472 பேர்களுக்கு பணம் செலுத்துவதற்கு இலக்காக கொண்டிருந்த போதிலும், 412 பேர்களுக்கு மட்டும் பணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் 3 கட்டங்களின்கீழ் 7,489.9 மில்லியன் ரூபா தொகை விடுவிக்கப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு யூன் 4 ஆந் திகதியிலும் அதில் வைப்புச் செய்தவர்களின் பொருட்டு 7,342.7 மில்லியன் ரூபா மட்டும் செலுத்தியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

2.2 நடைமுறைப்படுத்தியிருந்த உள்நாட்டு நன்கொடை கருத்திட்டங்கள்

---

(அ) 2016 ஆம் ஆண்டு செம்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய அபஇ/16/1810/702/061 இலக்க அமைச்சரவை தீர்மானம் பிரகாரம், மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ பிரிவினை தாபித்தல், அமெரிக்கா ஐக்கய குடியரசின் மெகென்சி மற்றும் கம்பெனியை சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளுதல், அத்துடன் அதன் பொருட்டு 2.3 அமெரிக்க டொலர் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதேபோன்று அதனூடாக மேற்கொண்ட பொருளாதார பலன்களை அடைந்துக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் 466.45 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கை பிரகாரம் அபிவிருத்தி முகவர் நிறுவனம் தாபிக்க வேண்டுமாயினும், அந்த நிறுவனத்தை சட்ட ரீதியாக தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அந்த முகவர் நிறுவனத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதிருந்தது.

(ஆ) 2017 வரவு செலவு திட்டம் நடைமுறைப்படுத்தல்

---

2017 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின்கீழ் இவ்வமைச்சின்மூலம் நடைமுறைப்படுத்துவதற்காக 05 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக 22,300 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சீரற்ற காலநிலை காரணமாக சேதங்கள் ஏற்பட்ட சொத்துக்களை புனரமைப்பதற்கு தேவையான பணம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இலங்கை நுஓஐஆ வங்கி தாபிப்பதற்கு ஒதுக்கப்பட்ட 10,000 ம் மில்லியன் ரூபாவை, அப் பணியின் பொருட்டு பயண்படுத்தலாகாது என்று திறைசேரி அறிவித்திருத்தல் மற்றும் பிரதேச தலைவர்களை வலுவூட்டுவதற்கு விசேட நிதியமொன்றை தாபிப்பதற்கு ஒதுக்கப்பட்ட 300 மில்லியன் ரூபாவை தேசிய வரவு செலவு திட்டமிடல் திணைக்களத்தால் அந்த ஒதுக்கீடுகளை தடைசெய்தல் காரணமாக அந்த இரண்டு பிரேரணைகளையும் நடைமுறைப்படுத்தப்படாதிருந்தது.

(ii) வரவு செலவு பிரேரணையின்கீழ் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு மில்லியன் ரூபா படி வழங்கப்பட்டு, தெரிவு செய்த இளம் வயது வியாபாரிகளுக்கு வட்டியற்ற கடன் வசதிகளை வழங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்த 7000 ம் மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு, அந்த கருத்திட்டத்திற்கு பதிலாக கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படுத்தியிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 5766.8 மில்லியன் ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) ஏற்றுமதி விஸ்தரித்தல், சுற்றலா மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை அழைப்பித்துக் கொள்ளுதலுக்காக 1,000 ம் மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகளிலிருந்து 900 ம் மில்லயின் ரூபாவை அனர்த்த நடவடிக்கைகளின் பொருட்டு தேசிய வரவு செலவு திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் எஞ்சிய 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடுகளிலிருந்து 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 17 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டிருந்தது.

2.3 பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

பெறுகைகளை திட்டமிடல்

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பினும், அரசாங்கத்தின் பொறுகை வழிகாட்டல் கோவை 4.2.1 (ஆ) (இ) மற்றும் (ஈ) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. மேலும் பெறுகை திட்டம் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(அ) பெறுகை திட்டத்தில் முதலாவது விடயமான பெறுகை வகையினை குறிப்பிடுகையில் பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள் என்ற வகையில் வகைப்படுத்தி, ஒவ்வொரு வகைகளுக்கும் உரிய பொருட்களை வெவ்வேறாக காட்டப்பட்டு, அதற்கான பெறுமதி காட்டப்பட வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ஒவ்வொரு செலவு விடயத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை மட்டும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை திட்டம் தயாரிக்கும்போது திட்டமிடப்பட்ட விலை கேள்வி அறிவிப்பின் திகதியை குறித்துரைத்து காட்டப்பட வேண்டுமாயினும், அவ்வாறான திகதி குறிப்பிடப்படவில்லையென்பதுடன், முதலாவது காலாண்டு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோன்று பெறுகை முடிவுறுத்துவதற்கான தினம் குறிப்பிட வேண்டுமாயினும், அதில் 4 ஆவது காலாண்டு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பெறுகை திட்டம் சரியாக தயாரிக்கப்படாமையால் பெறுகை அலுவல்களை நிறைவேற்றிக்கொண்டதன் பின்னர் திட்டத்துடன் ஒப்பிடுவதற்கு இயலாதென்பதுடன், நிருவாக காரணியாக பயன்படுத்துவதற்கும் முடியாதுள்ளது.

(இ) ஆண்டில் அமைச்சில் ஏற்பட்ட மாற்றங்களின்படி பெறுகை திட்டம் திருத்தப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அமைச்சினால் பெறுகை திட்டம் திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

(அ) வாகனங்களின் பயன்பாடு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(i) அமைச்சுக்குரிய வாகனங்களில் இணைக்கப்பட்ட வாகனங்களாக 06 வாகனங்களை பாராளுமன்ற உறுப்பினர்களிடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன். அந்த வாகனங்களின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 1,123,112 செலவிடப்பட்டிருந்தது.

(ii) அமைச்சுக்குரிய வாகனங்களில் ஒதுக்கப்பட்ட வாகனங்களாக 03 வாகனங்கள் பயன்படுத்தப்படுவதுடன். அவை இளைஞர் சேவை சபைக்குரிய வாகனங்கள் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயலற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

(i) 01/2018 இலக்க மற்றும் 2018 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆந் திகதி சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றுநிருபத்தின் 02 ஆவது பந்தி மற்றும் 02/2015 ஆம் இலக்க 2015 ஆம் ஆண்டு யூலை 01 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் 02 ஆவது பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, அகற்றப்படுதல் வேண்டுமென அடையாளம் காணப்பட்ட வாகனங்களை

சுற்றுநிருப திகதியிலிருந்து 03 மாத காலப்பகுதிக்குள் அகற்றப்பட்டு முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் எல்லா பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களதும், கணக்கீட்டு உத்தியோகத்தர்களதும், பொறுப்பாகும். 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது, முன்னர் இருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கொண்டு வரப்பட்ட, அப்போதே ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட தற்போது இவ்வமைச்சிற்குரிய 03 மோட்டார் சைக்கிள்கள், தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்திற்குரிய முச்சக்கர வண்டியொன்று, சிறிய கைத்தொழில் அபிவிருத்தி பிரிவிற்குரிய கார் வண்டி மற்றும் வேன் வண்டி 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதியிலும் அந்த வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருத்தல் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ii) தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்திற்குரிய பெஜரோ வண்டியொன்று 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்த வண்டியில் பதிவுச் சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் இல்லையெனவும், இந்த இலக்கத்தின்கீழ் மற்றுமொரு வாகனம் பதிவு செய்யப்பட்டுமையால் இந்த வாகனம் ஓட்டத்தில் விடுவதற்கு இயலாதெனவும் அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் முடிவடைந்திருப்பினும் இது தொடர்பாக தேவையான சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) சுவிகரிக்கப்படாத சொத்துக்களை முறையின்றி பயன்படுத்தல்

-----------------------------------------------------------------------------------

02/2017 ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையில் 02 ஆவது பந்திபடி அரசாங்கத்தின் ஒவ்வொரு நிறுவனத்தாலும் பயன்படுத்தும் அரசாங்கத்திற்குரிய ஒவ்வொரு வாகனமும், அந்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும், அமைச்சிற்குரிய 79 வாகனங்களை அமைச்சின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

2.5 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை.

-----------------------------------------------------------------------------------------------

2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிமூலம் இவ்வமைச்சு தாபிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் 03 ஆண்டு காலப்பகுதிக்குள் அமைச்சிற்கு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மீதி தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **செலவின வகை** | **தேறிய ஒதுக்கீடு** | **உபயோகம்** | **மீதி** | **மீதி தேறிய ஒதுக்கீடுகளின் சதவீதமாக** |
|---|---|---|---|---|---|
| ------- | ------------ | ---------------- | ----------------- | --------------- | --------------- |
| | | **மில்லியன் ரூபா** | **மில்லியன் ரூபா** | **மில்லியன் ரூபா** | |
| 2015 | மீண்டுவருஞ் | 2,120.7 | 1,925.4 | 195.3 | 9.2 |
| | மூலதன | 13,261.6 | 10,900.7 | 2,360.9 | 17.8 |
| | மொத்தம் | 15,382.3 | 12,826.1 | 2,556.2 | 16.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2016 | மீண்டுவருஞ் | 2,025.4 | 1,938.0 | 87.4 | 4.3 |
| | மூலதன | 31,193.6 | 20,856.2 | 10,337.4 | 33.1 |
| | மொத்தம் | 33,219.0 | 22,794.2 | 10,424.8 | 31.3 |
| 2017 | மீண்டுவருஞ் | 2,226.1 | 2,100.9 | 125.2 | 5.6 |
| | மூலதன | 47,818.9 | 25,137.3 | 22,681.6 | 47.4 |
| | மொத்தம் | 50,045.0 | 27,238.2 | 22,806.8 | 45.57 |

ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை
---------------------------------------------------------------------------
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரவு செலவு மதிப்பீடுகள்மூலம் ஒதுக்கீடு செய்திருந்த தொகை ரூபா.2,200,000 ஆகும். ஆயினும் மூலதன செலவு விடயங்கள் ஐந்தில் ஒதுக்கீடுகளை பயன்படுத்தாது முற்றுமுழுதாக எஞ்சியிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி மற்றும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆந் திகதிகளில் 10,000 ம் மில்லியன் ரூபா மற்றும் 300 மில்லியன் ரூபா என்ற வகையில் மேலதிக ஒதுக்கீடுகள்மூலம் ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டிருந்த, மூலதன செலவு விடயங்கள் இரண்டுக்கு ஏற்புடையதான 10,300 மில்லியன் ரூபா ஒதுக்கீடுகளானது, அந்த இரண்டு பிரேரணைகளையும் தேசிய வரவு செலவு திணைக்களத்தால் நிதி ஒதுக்கீடுகளை தடைசெய்தல் காரணமாக முற்றுமுழுதாக எஞ்சியிருந்தது.

(இ) மீண்டுவருஞ் செலவு விடயங்கள் 03 இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா.1,200,000 ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா. 880,000 ம் நி.ஒ.விதி 66 இன்கீழ் மாற்றுதல்களின்கீழ் வேறு செலவு வியடத்திற்கு மாற்றிய பின்னரும் ஆண்டு இறுதியில் ரூபா.320,000 அதாவது நூற்றுக்கு 100 பயன்படுத்தாதிருந்தது.

(ஈ) மீண்டுவருஞ் செலவு விடயங்கள் 06 மற்றும் மூலதன செலவு விடயங்கள் 10 இல் மொத்த தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 50 தொடக்கம் நூற்றுக்கு 99 வரையிலான எல்லைக்குள் எஞ்சியிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

(உ) செலவு விடயங்கள் நான்கிற்காக வரவு செலவு மதிப்பீடுகள்மூலம் ரூபா.3,000,000 ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்துகொண்டு அந்த ஒதுக்கீடுகளில் மொத்த அளவினை நி.ஒ.வி 66 இன் மாற்றுதல்களின் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

2.6 அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு
---------------------------------------------------------------------------
பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்
---------------------------------------------------------------------------
அமைச்சிற்குரிய விடய இலக்கம் 10401 இன்கீழ் அரசாங்க அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| செலவு | | கிடைக்கப் பெறுதல்கள் | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உண்மையன | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான | ஆகக் கூடிய எல்லை | உண்மையன |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 35 | 33 | 12 | 14 | 100 | 69.2 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்று பிரகாரம் அன்றைய திகதியில் அறவிடுவதற்கிருந்த நிலுவை மீதிகளின் மொத்தமானது, இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களினது கடன் மீதி தவிர்ந்த ரூபா. 2,781,358 ஆனதுடன், அந்த நிலுவை கடன் மீதியில் 05 அண்டு காலத்திற்கு அதிகமான காலவெல்லைக்குள் இருந்து வரும் கடன் மீதி ரூபா. 2,687,305 ஆகும். ஆயினும் அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை

2.7 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின்கீழ் உள்ள பொது வைப்புக் கணக்கு மூன்றுகளில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ள மிகுதிகளின் மொத்தம் ரூபா. 81,407,558 ஆகும்.

(அ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 2 பொது வைப்புக் கணக்குகளின்கீழ் 02 ஆண்டுகள் கடந்துள்ள வைப்புகள் தொடர்பாக நிதி.ஒழு.விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு யூலை 20 ஆந் திகதிய அரச நிதி கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 (04) (இ) பிரகாரம் சேகரிக்கப்படும் வருமானம், சேகரிப்பு கணக்குகளில் அல்லது வைப்புக் கணக்குகளில் வைக்காது, ஒவ்வொரு மாத இறுதியிலும் வைப்புக் கணக்கில் மீதி இருப்பின், ஆடுத்து வரும் மாதத்தில் முதலாவது வாரத்தில் அந்தந்த வருமானம் விடயவெல்லைக்குள் வைக்கப்பட வேண்டுமாயினும், எம்பிலிபிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தில் வெளியக நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு வசதிகளை அளிப்பதன்மூலம் 2017 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து ரூபா 1,546,851 6000-0-0-13-99 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியாகும்போதும் இருந்து வந்தமை அவதானிக்கப்பட்டது.

2.8 உள்ளக கணக்காய்வு

2017 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டம்படி இவ்வமைச்சிற்கு ஏற்புடையதாக 16 பிரதான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், அதில் 03 செயற்பாடுகள் அதாவது பதவியணியின் பயிற்சி, சம்பளம் மற்றும் வேதனங்கள், பெறுகை நடவடிக்கைகள் ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றியிருக்கவில்லை.

2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்யைமான பதவியணி மற்றும் ஆளக்குரிய வேதனங்களுக்கான செலவுகள்

(அ) அமைச்சின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிட பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு அமைச்சினால் ஆளுக்குரிய வேதானதிகளின் செலவு தொகுதி பொருட்டு 270 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் வருடாந்தம் தனி நபர் செலவு ரூபா 525,060 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 83 | 63 | 20 |
| (ii) | மூனாறாம் நிலை மட்டம் | 155 | 91 | 64 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 256 | 236 | 20 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 137 | 122 | 15 |
| (v) | ஏனைய | 6 | 3 | 3 |
| | மொத்தம் | 637 | 515 | 122 |

(ஆ) பதவியணியை பயிற்றுவித்தல்

(i) திருத்தம் செய்யப்பட்ட செயற்றிட்டம் - 2017 இன்படி பதவியணியின் பயிற்சி தேவைகளை பிரதான 05 செயற்பாடுகளின்கீழ் காட்டப்பட்டிருப்பினும், செயலாற்றுகை மதிப்பிட முடியுமான வகையில் செயலாற்றுகை சுட்டிகள், அதாவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, பயிற்சி வழங்கப்படும் அலுவலர்களின் எண்ணிக்கை என்பவற்றின் விபரங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் செயற்றிட்டம்படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. மேலும் பயிற்சி தேவைகளை அடையாளம் காணும் முறைமை இல்லாதிருந்ததுடன், அடையாளம் காணப்பட்ட பயிற்சி தேவைகளின்படி விபரத்துடனான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சிற்கு 12.6 மில்லியன் ரூபா, பதவியணியின் பயிற்சி தேவைகளின் பொருட்டு 2017 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீடுகளின்மூலம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 2,546,360 ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 20 என அவதானிக்கப்பட்டது.

(iii) மேலும், அமைச்சின் உண்மையான பதவியணி 515 ஆவதுடன், அதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு பங்குபற்றியுள்ள எண்ணிக்கை 127 ஆவதால், மீளாய்விற்கான ஆண்டில் எதுவித பயிற்சி வாய்ப்புகளும் கிடைக்கப்பெறாத பதவியணியின் எண்ணிக்கை 388 ஆக அவதானிக்கப்பட்டது.

2.10 அரசாங்க அலுவலர்கள் பிணை வைத்தல்

-----------------------------------------------------------

நிதி ஒழுங்குவிதி 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.